

திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற உலக புகழ்பெற்ற பாரம்பரியமிக்க நெல் திருவிழாவில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. , மாவட்ட ஆடசியர் மோகனசந்திரன்,பங்கேற்று இயற்கை விவசாயிகளுக்கு பரிசுகளை வழங்கினர். ஆர்.எஸ்.பாண்டியன் ப.பிரகாஷ்,வி.எஸ்.ஆர். தேவதாஸ்,பாலா. ஞானவேல், இரா.மனோகரன் எம். எஸ்.கார்த்திக், வழக்கறிஞர் எம்.ராமகிருஷ்ணன் மற்றும் நெல் ராஜிவ், கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

### சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிதிக்குறைவால் நிறுத்தப்பட்ட

# மே மாத ஊதியம் உடனே வழங்கிட உத்தரவிட்ட முதலமைச்சருக்கு நன்றி!

## சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவைத் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் அறிக்கை!

சென்னை, ஜூன் 4 - இந்தியாவின். மூத்த முதல் மூன்று பல்கலைக் கழகங்களுள் முதன்மையான சென்னைப் பல்கலைக்கழகம் நிதி நெருக்கடியால் மே மாத ஊதியம்,ஓய்வூதியம் ஆசிரியர் அலுவலர்க்கு வழங்காமல் கல்விச்செயலர் நிறுத்திவிட்டார். இதனால் கொதிப்படைந்த ஆசிரியர், அலுவலர் உள்ளிருப்புப் போராட்டம் தொடங்கினர்.

இது குறித்துச் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவரும் ஓய்வாசிரியர் பேரவை இந்நாள் தலைவருமான பேராசிரியர் மா. செல்வராசன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொணர்ந்து உடனடியாக நிறுத்தப்பட்ட ஊதியத்தை வழங்கிட ஆணையிடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

உடனடியாக ஆசிரியர் அலுவலர்க்கு நிறுத்தப்பட்ட மே மாத ஊதியத்தை வழங்குமாறு அறிவுறுத்தி ஊதியம் பெறுவதற்கு அருளுடன் ஆணையிட்ட முதலமைச்சர் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவை அளப்பரிய நன்றிகளை அளிக்கின்றது எனப் பேராசிரியர் மா.செல்வராசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளையொட்டி – சோ.துரைப்பாண்டியன் ஏற்பாட்டில்

# கோவை 35 வது வட்டத்தில் மரம் நடும் விழா!

## திருமதி மாலதி முன்னிலை! மதியழகன்–குமரேசன் – சம்பத் பங்கேற்பு!

கோவை, ஜூன் 4 - தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர், ராஜதந்திரி, சுயமரியாதை சுடரொளி, ஈடு செய்ய முடியாத ஆளுமையுமான,

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளான நேற்று (3.6.2025) காலை 8.30 மணிக்கு, செம்மொழி நாளாக கொண்டாடும் வகையில், கழகத் தலைவரின் அறிவுறுத்தலை அடுத்து, ஒன்றிணைந்த மாவட்டங்களின் பொறுப்பாளர் செந்தில் பாலாஜி ஆலோசனையின் பேரிலும் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.ஆ. ரவி அறிவுறுத்தலின் பேரிலும், அறிஞர் அண்ணாநகர் கம்பீர சித்தி விநாயகர் திருக்கோவிலுக்கு அருகிலும், ரேஷன் கடைக்கு எதிரில் உள்ள காலியிடங்களில் “ மரம் நடும் விழா “ அறிஞர் அண்ணா நகர் நலச்சங்கத்தின் சார்பாகவும், கம்பீர சித்தி விநாயகர் திருக்கோயிலின் சார்பாகவும், கவுண்டம்பாளையம் பகுதி 35 வது வட்டக் கழகத்தின் சார்பாகவும் நடைபெற்றது.

35 வது வட்டக் கழக அணித்தலைவர் துரைப்பாண்டியன் ஏற்பாட்டில் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் திருமதி மாலதி முன்னிலை வகிக்க நடைபெற்ற இவ்விழாவில் முன்னாள் பகுதிச் செயலாளர் மதியழகன் 35 வது வட்டக் கழக செயலாளர் குமரேசன், மாமன்ற உறுப்பினர் சம்பத், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சூரியன் தம்பி, விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளர் கனகராஜ், 16வது வட்டக் கழக அவை தலைவர் சுப்பிரமணியன், 33 வது வட்டக் கழக அவைத் தலைவர் நாகராஜ், 42வது வட்டக் கழக அவைத் தலைவர் உதயசூரியன், மருத்துவ அணி டாக்டர் கணேஷ், சசி பாபு, பகுதி பிரதிநிதி காந்திநகர் டி. மணி , இளைஞரணி சிவ சங்கர், வெள்ளியங்கிரி, BLA2 அக்ரோ வாட்டர் சோனை சாமி BLA 2 சங்கர பாண்டியன் BLA 2 குணா, BLA 2 BLA 2 பழனிச்சாமி பஷீர்,BLA 2 சூர்யா, BLA 2 ஆர் கே. குமார், BLC பாபு, லயன் சந்திரலிங்கம்,

ஆசாரி மணி, சலூன் பாலன், இ சர்வீஸ் மோகன் ராஜ், மகாலட்சுமி, ரங்கநாதன், பெஸ்ட் அன்பு, சேமியா ரகுபதி, ரேஷன் கடை மாணிக்கம், குப்புராஜ், சண்முகம் பத்மா, LMW செல்வராஜ், மாசாணி நகர் கௌசல்யா, பியூட்டிசியன் சுஜாதா, ரமேஷ், லயன் நடராஜன், தீபக் குமார், நல்லப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.06.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, மாணாக்கர்களுக்கு புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை வழங்கினார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ், பெரியண்ணன் அரசு, த.சந்திரசேகரன், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சூலூர் கண்ணம்பாளையத்தில் இயங்கி வந்த குட்கா தயாரிப்பு ஆலையை எதிர்த்து கண்டனம் தெரிவித்து, நியாயமான விசாரணை நடத்தக்கோரியதால் அ.தி.மு.க ஆட்சியில் போடப்பட்ட பொய் வழக்கு சம்பந்தமாக 02.06.2025 திங்கட்கிழமை காலை கோவை ஜே.எம்.1 நீதிமன்றத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பள்ளபாளையம் பேரூராட்சி தலைவர் பி.எஸ்.செல்வராஜ், பள்ளபாளையம் பேரூராட்சி செயலாளர் பே.கபிலன், சூலூர் பெ.சுரேஷ்குமார், பாப்பம்பட்டி பரமசிவம், மாதப்பூர் தங்கராஜ், ராவத்தூர் செல்வராஜ், கண்ணம்பாளையம் சண்முகம் ஆகியோர் வருகை தந்தனர். உடன் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன், தலைவர் மதுபாண்டியன், உள்பட கழக வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், பெரியகடை வீதி பகுதி 2 செயலாளர் வி.ஐ.பதுருதீன், வட்டக் கழகச் செயலாளர்கள் பவுன் பா.ஆனந்த், விஜயகுமார், சுரேஷ், சபரி கோபால், காளிதாஸ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், நஞ்சப்பகவுண்டன் வலசு அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியருக்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கேடயங்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வி. செல்வராஜ், முதன்மை கல்வி அலுவலர் சுப்பா ராவ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில்

# மாணாக்கர்களுக்கு புதிய பாடநூல்கள், சீருடைகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜூன் - 4 - முதலமைச்சர் அவர்கள் (02.06.2025) அன்று சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 202526 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, மாணாக்கர்களுக்கு புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை வழங்கினார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்களின் கல்வி நலனை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு கல்வித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லாப் பாடநூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்களோடு, புத்தகப் பைகள், காலணிகள் (Footwear's), காலேந்திகள் (Shoes), காலுறைகள், மழைக்கோட்டுகள், கம்பளிச்சட்டைகள், வண்ணப்பென்சில்கள், கிரையான்ஸ், கணித உபகரணப் பெட்டிகள், கணுக்காலேந்திகள் (Ankle boot) மற்றும் புவியியல் வரைபடங்கள் என பல்வேறு கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது.

2025-26 ஆம் கல்வியாண்டில் சுமார் 311 கோடி ரூபாய் மதிப்பிலான 4.30 கோடி பாடநூல்கள், சுமார் 457 கோடி ரூபாய் மதிப்பிலான 1.3 கோடி சீருடைகள், 162 கோடி ரூபாய் மதிப்பிலான 9.6 கோடி நோட்டு புத்தகங்கள் மற்றும் 211 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு கல்வி உபகரணங்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025 26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, மாணாக்கர்களுக்கு புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில், அரசு/ அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 92,446 மாணாக்கர்களுக்கும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 1,10,159 மாணாக்கர்களுக்கும் என மொத்தம் 2,02,605 மாணாக்கர்களுக்கு, வண்ண கிரையான்ஸ், வண்ண பென்சில், காலணிகள், காலை உணவு திட்டம், அட்லஸ், பாடக் குறிப்பேடு, சீருடைகள், கால் ஏந்தி (சூ) சாட்ஸ், பஸ் பாஸ், பாட புத்தகம், புத்தகப் பைகள், கணித உபகரணப்பெட்டி, சைக்கிள், கல்வி உதவித் தொகை, சத்துணவு உள்ளிட்ட 15 வகையான விலையில்லா கல்வி நலத் திட்டங்கள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 39,287 அங்கன்வாடி மையங்களில் பயிலும் 1,799 குழந்தைகளுக்கு இணை சீருடைகள் வழங்கும் பணிகள் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டது.

எனவே, மாணாக்கர்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய கல்வி நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட கல்வி அலுவலர்கள் ரமேஷ் (புதுக்கோட்டை), செந்தில், ஜெயந்தி, கலாராணி (அறந்தாங்கி), லீலாவதி (தனியார் பள்ளிகள்), மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஸ்ரீதர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பெரியண்ணன் அரசு, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர்த.சந்திரசேகரன், புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஜெ.தமிழரசி, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சாலை செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குருமாரி முத்து மற்றும் எம்.எம்.பாலு, நைனாமுகமது, சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திருச்சியில், தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் தலைமையில் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், முன்னிலையில் திமுகவினர் கலைஞரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ், கருணாநிதி, சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, குடமுருட்டி சேகர் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த், அவை தலைவர் அம்பிகாபதி மற்றும் கழக நிர்வாகிகள் கண்ணன், ராம்குமார், நாகராஜ், பி.ஆர்.பாலசுப்பிரமணியன், இளங்கோ, விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, கைலஸ் முஸ்தபா, கலைச்செல்வி , வழக்கறிஞர் அந்தோணி , பாரதி, உத்தமர் சீலி ராஜேந்திரன்உட்பட மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.